OS.No.359/2023 – 25.11.2024

PW2 – கந்தசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பழனிசாமி செல்வத்திடம் பணம் கொடுத்தார். அதற்கு சாட்சி சொல்வதற்காக நான் வந்திருக்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டுதான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரி. வாதியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 5,6 வருடமாக தெரியும். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால் இல்லை. பழனிசாமி அழைத்தார் அதனால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் எங்கே குடியிருக்கிறேன் என்றால் பெரிய சீரகாபாடியில் குடியிருக்கிறேன். வாதி எங்கே குடியிருக்கிறார் என்றால் சின்ன சீரகாபாடியில் குடியிருக்கிறார். எனக்கும் வாதிக்கும் 3 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். பணம் எங்கே வைத்து எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 05.03.2021ல் வாதியின் வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. நான் வாதியின் வீட்டிற்கு சென்றேனா என்றால் பிரதிவாதி அழைத்ததால் நான் சென்றேன். நான் எப்படி சென்றேன் என்றால் பைக்கில் சென்றேன். பணத்தை எப்படி கொடுத்தார் என்றால் ரொக்கமாக

கொடுத்தார். ரூ.500 கட்டுகளாக கொடுத்தார். வாதிக்கு பணம் எப்படி வந்தது என்று தெரியுமா என்றால் அவர் விவசாயம் மற்றும் நிலம் விற்ற பணத்தை வைத்து கொடுத்தார். மற்ற விவரங்கள் தெரியாது. பணம் கொடுக்கும்போது என்னுடன் வேறு யாரும் இல்லை என்றால் செல்வமும் மற்றொருவரும் வந்தார்கள். பிரதிவாதி எப்படி வந்தார் என்றால் பைக்கில் வந்தார்.

வாதியும் பிரதிவாதியும் பணம் பரிவர்தனை செய்த காலத்தில் கொரோனா காலம் என்றும் அந்த சமயத்தில் யாரும் வெளியில் செல்லமுடியாது என்றும் எனவே எந்த பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் அன்றே பணம் கேட்டு அன்றே வாதி, பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என்றால் சரி. புரோநோட்டை நான் எழுதவில்லை என்றால் சரி. புரோநோட்டை யார் எழுதினார்கள் என்றால் செல்வத்துடன் வந்த தமிழ்மணி எழுதினார். சராசரியாக ரூ.50,000/-க்கு மேல் பண பரிவர்தனை செய்தால் முறையான ஆவணங்கள் மூலம்தான் செய்ய வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் விவசாயம் செய்து வந்தார். தற்போது வாடகைக்கு விட்டுள்ளார். பிரதிவாதியை எவ்வளவு வருடமாக தெரியும் என்றால் 3,4 வருடமாக தெரியும். நானும் பிரதிவாதியும் ஒரே சமூகத்தை

சார்ந்தவர்கள் என்பதால்தான் தெரியும் என்றால் நானும் அவரும் பருத்தி மண்டிக்கு செல்லும் வகையில் பழக்கம். வாதிக்கு ஆதரவாக நான் புரோநோட்டில் சாட்சி கையெழுத்து செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டார் என்பதற்காக அவர் தயார் செய்த புரோநோட்டில் நான் கையெழுத்து செய்துவிட்டு வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பணம் கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பைனான்ஸ் தொழில் செய்யவில்லை என்றால் சரி. ஆனால் ரூ.1.50 வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறார். பிரதிவாதி கேட்ட நாள் அன்றே வாதி பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிலம் விற்று வைத்திருந்த பணத்தை கொடுத்தார். வாதியை பிரதிவாதிக்கு தெரியாது என்றும் என்னை வைத்து பிரதிவாதி மீது பொய்யான வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அவர்களுக்குள் எந்த பண பரிவர்த்தனையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.